1978 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையில், 1971 ஆம் ஆண்டு, ஆலைகள் விரிவாக்கும் திட்டத்தின் கீழ் 200 அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, இந்திய அரசால் 15 இலட்சம் ரூபாய் மாநில அரசுக்குக் கடனாக வழங்கப் பட்டது. இந்தத் தொகை அந்த ஆலையின் பங்குத் தொகையாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டுக்குள்ளாக இருநூற்றுக்கும் மேலாகவே, அதாவது கிட்டத்தட்ட 289 அகதிகளுக்கு நாம் வேலை வாய்ப்பைக் கொடுத்திருக்கிறோம்.

மேலும் ஏதாவது வேலை வாய்ப்புக் கொடுக்கப்படுமா என்று கேட்டிருக் கிறார்கள். 289 அகதிகளில் 128 அகதிகள் அவர்களது சொந்த விருப்பத்தின் பேரில் அவ்வப்போது வேலையை விட்டுச் சென்றிருக்கிறார்கள். எனவே இப்போதுள்ள நிலையில் அந்த 200 அகதிகளை வேலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டியிருப்பதால், கிட்டத்தட்ட 80 அல்லது 90 இடங்களில் இப்போது அகதிகளை நியமிக்க வேண்டுமென்று முடிவு செய்து, அதிலே குறிப்பாக மத்திய அரசிடம் ரூ. 10 லட்சம் கடனாகக் கோரியிருந்தோம். அதையும் அவர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், கழிவுப் பருத்தியிலிருந்து துணி உற்பத்தி செய்யும் ஆலையில் 90 அகதிகளுக்கு வேலை கொடுக்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த ஆரம்பித்திருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(1) அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதைப் பற்றியும் அவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைத்திருப்பதைப் பற்றியும் இம்மன்றத்தில் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசியபோது அவை முன்னவர் அவர்கள் அதற்கான விளக்கம் அளிக்கும்போது

முதலமைச்சர் வெளியூர் சுற்றுப் பயணத்தில் இருப்பதால் அவர் வந்தவுடனே விடுதலை செய்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதைப் பற்றி அரசு முடிவு எடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் கூட சட்டமன்றப் பேரவையில் பேசியதாகப் பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். ஆனால் தொடர்ந்து அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விடுதலை செய்யப்படவில்லை. முதலமைச்சர் அவர்கள் சென்னை நகரத்தில்தான் இருக்கிறார்கள். அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? மன்றத்திற்கு அதைப்பற்றித் தெரிவிக்க முடியுமா என்பதை அவை முன்னவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*** மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்கள் சில கோரிக்கைகளை வைத்துப் போராடி வருவதைப்பற்றி இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்த நேரத்தில், அரசின் சார்பிலே அன்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். அது பதிவேடுகளிலும் இருக்கிறது. இங்கே நான் கூறும் போது, முதலமைச்சர் அவர்கள் வந்து பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் என்ற அளவில்தான் என்னுடைய வார்த்தைகள் அமைந்திருக்கின்றனவே தவிர, அவர்கள் விடுதலை செய்யப்பட்டு பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படுவார்கள் என்று என்னைப் பொறுத்தவரையில் சொல்லவில்லை என்பதைத் திரும்பவும் உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு யூனியன் இருக்கிறது என்றால் அவர்களது நிர்வாகப் பொறுப்பில் பலர் இருக்கிறார்கள். இங்கே போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்படாத சூழ்நிலையில் உள்ளவர்கள் கூட பேச்சு வார்த்தையில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இப்போதுதான் முதலமைச்சர் அவர்கள் பேரவையில் வந்து அறிக்கை கொடுத்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதையெல்லாம் திரட்டி நாளை அல்லது நாளைய மறுதினம் அரசாங்கத்தின் நிலை என்ன என்பதைத் தெரிவிக்க இயலும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) விடையளிக்கப்படாமலுள்ள வினாக்கள் குறித்து.

THIRU A. R. DAMODARAN: Sir, yesterday you promised to inform us of the stage at which my questions rest. May I know from you, Sir, about that?

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : நானே அதைப்பற்றிச் சொல்வதற்கிருந்தேன். உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன், அவர்கள் நேற்று அவர் கேட்டிருந்த கேள்விகளுக்கு அதற்கான கால வரம்பு கடந்தும் கூட விடைகள் இங்கே வைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட